**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| MCOP. No. 64/2016 | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Religion: | இந்து |
| Father's Name: | பாலன் | Caste: | |
| Village: | எசண்ணக்கோரை | Calling: | டிரைவர் விபத்திற்கு முன்பு |
| Taluk: | திருச்சி | Age: | 39 |

Date: 1.11.2019 – PW –1

மனுதாரர் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் திருச்சியை சேர்ந்தவர் என்றால் ஆமாம். விபத்து நடந்த காலத்தில் இருந்து தற்போது வரை திருச்சியில்தான் இருக்கிறேன் என்றால் ஆமாம். நான் ஓட்டிச் சென்றது எனக்கு சொந்தமானது என்றால் ஆமாம். அந்த வாகனம் திருச்சி இன்சூரன்ஸ் கம்பெனியில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த விபத்தானது நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டியில் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். விபத்து ஏற்பட்ட நாமக்கல் மாவட்டத்திலோ, நான் குடியிருக்கும் திருச்சியிலோ, வாகனம் காப்பீடு செய்யப்பட்ட திருச்சி மாவட்டத்திலோ மனு தாக்கல் செய்யாமல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் என்னுடைய அப்பா திருச்செங்கோட்டில் குடியிருந்தார். இந்த மனுவில் மனுதாரரும், 1 ஆம் எதிர்மனுதாரரும் நான்தான் என்றால் ஆமாம். இரண்டு பேருக்கும் ஒரே முகவரிதான் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். 1 ஆம் எதிர்மனுதாரராகிய எனக்கு நானே நீதிமன்றம் மூலமாக சம்மன் அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி ஒப்புதல் அட்டை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அழைப்பாணையை பெற்றுக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது தெரியவில்லை. மனுவில் உள்ள விவரங்களை படித்துப் பார்த்து அதற்கான விளக்கங்களை கேட்டு தெரிந்து கொண்டுதான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். மனுவில் 1 ஆம் எதிர்மனுதாரராகிய நானும், 2 ஆம் எதிர்மனுதாரரும் நஷ்டஈடு தர வேண்டுமென கோரியுள்ளேன் என்றால் ஆமாம். எனக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, இருந்தது. ஓட்டுநர் உரிமம் நகல் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் என்ற முறையில் பெறத்தக்க பர்சனல் கிளைம்-ஐ காப்பீட்டு நிறுவனத்தில் கேட்டேனா என்றால் வண்டிக்கும் எனக்கும் சேர்த்து என் அப்பா கேட்டார். ரூ.40 ஆயிரம்தான் தருவதாக சொன்னார்கள். நான் ஓட்டிச் சென்ற டாடா வண்டியில் மாதத்தில் எத்தனை நாள்

வாடகைக்கு செல்லும் என்றால் 20 நாட்கள் செல்லும். ஒரு நாளைக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் ரூ.400 ம் வரும், ரூ.500 ம் வரும். மாதத்தில் ரூ.8 ஆயிரம் வரும். எனக்கு மாதம் ரூ.8 ஆயிரம் வரும் என்றால் வண்டிக்கான மாதாந்திர தவணையும் அதன் மூலம்தான் செலுத்தி வந்தேன். நான் மாதம் ரூ.8 ஆயிரம் சம்பாதிக்கும் பட்சத்தில் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றொரு லாரி எங்கு நின்று கொண்டிருந்தது என்றால் ரோட்டின் ஓரமாக நின்று கொண்டிருந்தது. எந்தவித சமிக்கையும் செய்யாமல் நின்று கொண்டிருந்தது என்றால் ஆமாம். சமிக்கை விளக்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் ஆமாம். இந்த விபத்திற்கு முழுக்காரணமும் லாரியின் ஓட்டுநர் சமிக்கை விளக்கை வைக்காமல் இருந்ததுதான் காரணம் என்றால் ஆமாம். லாரியின் உரிமையாளரும், காப்பீட்டு கழகமும் எனக்கு நஷ்டஈடு தருவதில் ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். அவர்களிடம்தான் நான் இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் எனது நிறுவனத்தில் கோரியுள்ளேன். என்மீது எந்த தவறும் இல்லை. நாமக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டு ரூ.1800/- அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் நான் செல்லவில்லை. நாமக்கல் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எஸ்.டி.சி.நெ.661/2015 ல் 12.2.2015 ல் நான் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் நான் செல்லவில்லை. 2 ஆம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த நஷ்டஈடும் தர வேண்டியதில்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எங்கு சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் நாமக்கல் சி.எம். மருத்துவமனையிலும், திருச்சி ஜி.எச்-லும் எடுத்துக் கொண்டேன். கடைசியாக எப்போது சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் 3 மாதம் உள்நோயாளியாக இருந்தேன். எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அங்கு சேர்த்தார்கள். தற்போது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வீட்டில் இருந்து வருகிறேன். நான் வித்திற்கு முன்பு செய்த வேலையைத்தான் தற்போதும் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தினாலும் வருமான இழப்பும், ஊனமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.
மறு விசாரணை - இல்லை.

Sd/- Saravanan

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**